# <u>2016–2017 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு</u>

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம் – 2003 (சட்டம் எண்.16/2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 2003 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6(2)-ன்படி, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வு செய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வு முடிவுகளை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்க வேண்டும்.

இச்சட்டத்தின் பிரிவு 6(3)ன் படி ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது,

பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும்:—

(அ) இச்சட்டத்தின்படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகளை (Obligations) நிறைவேற்றுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ) அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தப்படவேண்டிய வரவு—செலவுத் திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள தீர்வுகள் (Remedial measures)

இதன் அடிப்படையில், 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு—செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2016 வரையிலான ஆறு மாத காலத்திற்கான ஆய்வினை 2016 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளன்று மாண்புமிகு அமைச்சர், நிதி மற்றும் பணியாளர் (ம) நிர்வாக

சீர்திருத்தத் துறை அவர்கள் மேற்கொண்டார். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

## வருவாய் வரவுகள் பற்றிய ஆய்வு:

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்

இ) மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

மத்திய அரசின் உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட **2016–2017** ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் **1,48,175** கோடி ரூபாயாகும்.

**2016** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் **64,769** கோடி ரூபாயாகும். இது **2016–2017** ஆம் ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் **43.71** சதவீதமாகும். இது **2015–2016** ஆம் ஆண்டில் அதே கால அளவில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் **8.37** சதவீதம் கூடுதலாகும். **2016–2017** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளோடு ஒப்பிட்டு, மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2016–2017 ஆம் நிதியாண்டின் முதல் ஆறு மாதகாலங்களில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2015–2016 துணை நிலைக் கணக்குகள் | 2016–2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2015 வரையிலான துணை நிலைக் கணக்குகள் | செப்டம்பர் 2016 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2015–2016 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2016–2017 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2016–2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 80,495 | 90,692 | 38,277 | 41,279 | 7.84 | 45.52 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 8,918 | 9,724 | 2,966 | 3,517 | 18.58 | 36.17 |
| மத்திய வரிகளில் பங்கு | 20,335 | 23,018 | 9,064 | 9,865 | 8.84 | 42.86 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 19,260 | 24,741 | 9,461 | 10,108 | 6.83 | 40.86 |
| **மொத்தம்** | **1,29,008** | **1,48,175** | **59,768** | **64,769** | **8.37** | **43.71** |

**(அ) <u>மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:</u>**

**2016** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான முதல் ஆறு மாதங்கள் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **41,279** கோடி ரூபாயாகும். இது **2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **45.52** சதவீதம் ஆகும். இது முந்தைய ஆண்டின் அதாவது **2015–2016** ஆம் ஆண்டு அதே கால அளவில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது **7.84** சதவீதம் உயர்ந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

| மாநில வரிகள் | 2015–2016 துணை நிலைக் கணக்குகள் | 2016–2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2015 வரையிலான துணை நிலைக் கணக்குகள் | செப்டம்பர் 2016 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2015–2016 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2016–2017 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2016–2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| வணிக வரிகள் | 60,111 | 67,630 | 28,759 | 31,194 | 8.47 | 46.13 |
| மாநில ஆயத் தீர்வைகள் | 5,836 | 6,636 | 2,712 | 3,061 | 12.87 | 46.13 |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் | 8,722 | 9,858 | 4,443 | 4,374 | -1.62 | 44.34 |
| வாகனங்கள் மீதான வரிகள் | 4,233 | 4,794 | 2,145 | 2,473 | 15.29 | 51.60 |
| ஏனையவை | 1,593 | 1,774 | 218 | 177 | -19.27 | 9.92 |
| **மொத்தம்** | **80,495** | **90,692** | **38,277** | **41,279** | **7.84** | **45.52** |

மாநில வரிகளின் முக்கிய இனங்களில் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் 7.84 சதவீதம் உயர்ந்துள்ளது. முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் மற்றும் ஏனையவையின் கீழ் வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைந்துள்ளது. பொருளாதார மந்த நிலையின் காரணமாக, கணிக்கப்பட்ட அளவிற்கு வணிக வரிகளின் கீழ் வருவாய் கிடைக்கப் பெறவில்லை. பெட்ரோலியப் பொருட்கள் மீதான விற்பனை வரி மூலம் பெறப்படும் வரி வருவாய் கணிக்கப்பட்ட அளவிற்கு இல்லை. வணிக வரிகளில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியின் காரணமாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவுகளில் வளர்ச்சி கணிக்கப்பட்டதைவிட குறைந்துள்ளது.

முதல் ஆறு மாதங்களில் முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்களின் மூலமாக பெறப்பட்ட வருவாய் வரவுகள், சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது வருவாய் குறைந்து மாநிலத்தின் நிதி ஆதாரங்களில் கடுமையான

பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளின் பத்திரப் பதிவு மீதான உயர்நீதிமன்ற தடையாணை காரணமாகவும், மந்தமான பொருளாதார வளர்ச்சி காரணமாகவும், முத்திரைத் தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் வருவாய் வரவுகள் குறைந்து காணப்படுகிறது.

வரி வருவாயை அதிகரிக்க, அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகின்றது. மேலும், சிறப்பு நடவடிக்கைகள் மூலம் வணிக வரி நிலுவைகளை வசூலிப்பதற்குத் தேவையான முயற்சிகளும், 47A பிரிவுப்படி நிறுத்தி வைக்கப்பட்ட முத்திரைத்தாள் இனங்களில் வசூலை தீவிரப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி வருவாய் இலக்கினை அடைவதை உறுதிசெய்ய அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

**(ஆ) <u>மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் :</u>**

**2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான **9,724** கோடி ரூபாயில், **2016** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய் **3,517** கோடி ரூபாயாகும். இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயைக் காட்டிலும் **18.58** சதவீதம் கூடுதல் வளர்ச்சியையும், **2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **36.17** சதவீதமாகவும் உள்ளது. வரும் மாதங்களில் வட்டி வருவாய் மற்றும் இரும்பு அல்லாத கனிமப் பொருட்களை வெட்டியெடுத்தல், உலோகத் தொழில்களின் மூலம் பெறப்படும் வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், **2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு :**

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத்திற்கான மத்திய அரசின் பொது

வகைப்படுத்தப்பட்ட பங்கு 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, மாநிலங்களுக்கான வரிகளின் பங்களிப்பில் 19.04 சதவீதம் குறைந்துள்ளது. 2015–2016 ஆம் ஆண்டு துணை நிலைக் கணக்குகளின் படி, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்காக 20,354 கோடி ரூபாய் பெறப்பட்டது. தமிழ்நாட்டிற்கான பங்கு குறைக்கப்படாமல் இருந்திருந்தால் 25,153 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கக்கூடும். அதாவது, பெற்றிருக்க வேண்டிய 25,153 கோடி ரூபாயை விட, 4,799 கோடி ரூபாய் குறைத்து 20,354 கோடி ரூபாய் மட்டுமே தமிழ்நாடு பெற்றது. இது பதினான்காவது நிதிக்குழுவினால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பாகும்.

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு 2016–2017 ஆம் ஆண்டிற்கு மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்காக மொத்தம் 23,018 கோடி ரூபாய் என்று நிர்ணயம் செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில், இந்தத் தொகை மத்திய அரசால் மாதாந்திர

தவணையாக வழங்கப்பட்டு, காலாண்டிற்கு ஒருமுறை என்ற அடிப்படையில் சரிகட்டப்படுகிறது. நவம்பர் மாதம் முதல் காலாண்டுக்கான தவணை சரிகட்டப்பட்டது. 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வரவுகள் 9,865 கோடி ரூபாயாகும். கடந்த ஆண்டு இதே காலகட்டம் வரை பெறப்பட்ட வரவுகள் 9,064 கோடி ரூபாயாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வரவுகள் முந்தைய ஆண்டின் இதே காலத்தில் பெறப்பட்ட வரவினத்தைக் காட்டிலும் 8.84 சதவீதம் கூடுதலாகவும், 2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 42.86 சதவீதமாகவும் உள்ளது.

மேலும், நடப்பு நிதியாண்டின் இனி வரும் காலங்களில் மீதமுள்ள தவணைகளை மத்திய அரசு வழங்கவிருப்பதால், 2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) <u>மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்:</u>

2016–2017 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் மறுசீரமைக்கப்பட்ட திட்டங்கள் உட்பட்ட, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்களில் 24,741 கோடி ரூபாய் என கணிக்கப்பட்ட அளவைக் காட்டிலும், 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 10,108 கோடி ரூபாய் மட்டுமே வரப்பெற்றது. இது 2016–2017 ஆம் ஆண்டிற்கு கணிக்கப்பட்ட வரவினத்தில் 40.86 சதவீதமாகும். முந்தைய ஆண்டு (2015–2016) இதே காலகட்டத்தில் மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற உதவி மானியம் 9,461 கோடி ரூபாயாகும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டு, மாநிலப் பகிர்வில் மாற்றம் செய்யப்பட்டதால், இத்திட்டங்களுக்கு மாநில அரசானது தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து அதிகமான நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. மத்திய அரசிடமிருந்து முந்தைய ஆண்டுவரை விடுவிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை

மற்றும் நடப்பு நிதியாண்டு வரவுகளைப் பெறுவதற்கு தொடர் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் பெறப்பட வேண்டிய உதவித்தொகை, மெட்ரிகுலேசனுக்கு பின் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை மற்றும் 13வது நிதிக்குழு மானியங்களின் நிலுவைகளைப் பெற சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய மானியங்களில் உள்ள நிலுவைகளால் தமிழ்நாட்டின் நிதிநிலை பாதிக்கப்படும் காரணத்தால், குறித்த நேரத்தில் மானியங்களை மத்திய அரசிடமிருந்து பெற செயலகத் துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## <u>செலவினங்கள் குறித்த ஆய்வு</u>

### (அ) <u>வருவாய்க் கணக்கு செலவினம்</u>

2016–2017 ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கு செலவினங்கள் 1,64,030 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் 78,573 கோடி ரூபாயாகும். இது வருவாய்க் கணக்கு செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 47.90 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் 66,057 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்ச் செலவினம் ஏற்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 18.95 சதவீதம் அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினப் போக்கின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய்ச் செலவினங்கள் | **2015–2016** துணை நிலைக் கணக்குகள் | **2016–2017** திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் **2015** வரையிலான துணை நிலைக் கணக்குகள் | செப்டம்பர் **2016** வரையிலான செலவினம் | **2015–2016** ஆம் ஆண்டைக் காட்டிலும் **2016–2017** ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | **2016–2017** திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 38,980 | 45,542 | 20,362 | 23,235 | 14.11 | 51.02 |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 16,888 | 18,868 | 9,462 | 10,127 | 7.03 | 53.67 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 9,728 | 10,185 | 3,645 | 3,309 | (-) 9,22 | 32.49 |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 57,211 | 68,211 | 25,145 | 33,473 | 33.12 | 49.07 |
| வட்டி செலுத்துதல் | 18,174 | 21,216 | 7,437 | 8,428 | 13.33 | 39.72 |
| ஏனையவை | 12 | 8 | 6 | 1 | (-) 83.33 | 12.50 |
| **மொத்தம்** | **1,40,993** | **1,64,030** | **66,057** | **78,573** | **18.95** | **47.90** |

**(ஆ) <u>மூலதனச் செலவினம்</u>**

**2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவினத்திற்காக **22,369** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், **2016** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை **4,733** கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மூலதனச் செலவினத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் **21.16** சதவீதமாகும். மூலதனச் செலவுகளுக்கான பணிகளை மேற்கொள்ள அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், வரும் மாதங்களில், மூலதனப் பணிகளின் செயலாக்கம் துரிதப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

**(இ) <u>2016–2017 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு</u>**

**2016–2017** ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான **60,610** கோடி ரூபாய்க்கான திட்டப்பணிகளின் செயலாக்கம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. நடப்பு நிதியாண்டின்

முதல் ஆறு மாதங்களுக்கான திட்டச் செலவினம் 18,735 கோடி ரூபாயாகும். இது 2016–2017 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 30.91 சதவீதமாகும். திட்டப்பணிகளின் செயல்பாட்டினை விரைவுபடுத்தி, ஆண்டுத் திட்ட இலக்கை முழுமையாக எய்துவதற்குத் தேவையான அறிவுரைகள் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதால் இலக்கு முழுமையாக எய்தப்படும்.

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாநில அரசு திருத்தங்கள் மேற்கொண்டது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி, மாநில அரசு 2019–2020 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரிக்கப்படுகிறது. 2015–2016 ஆம் ஆண்டில்,

நிதிப் பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.69 சதவீதமாகும்.

2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பிறகு, ஆண்டு வாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பு – I –இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான
நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

## நடப்பு ஆண்டில் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2016–17 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2016, செப்டம்பர் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | **1,48,175** | **64,769** |
| வருவாய்க் கணக்கு செலவினம் | **1,64,030** | **78,573** |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–) | **(–) 15,855** | **(–) 13,804** |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | **24,679** | **5,166** |
| மொத்தச் செலவினம் | **1,88,709** | **83,739** |
| நிதிப் பற்றாக்குறை | **40,534** | **18,970** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | **13,69,494** | **––––** |
| | | (%) |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | 0 / உபரி நிலை | <-5.00 |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | **(–)10.70** | **(–)21.31** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | **< 3.00** | **< 3.00** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | **2.96** | **–––** |

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வருவாய்ப் பற்றாக்குறை 13,804 கோடி ரூபாயாக உள்ளது. எனினும், வருவாய்–செலவினங்களுக்கான இடைவெளியை சமன் செய்து வருவாய்ப் பற்றாக்குறையை குறைக்க செலவினங்களைக் கட்டுப்படுத்தியும், வரி வருவாயை ஈட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## நிதிநிலைக் குறியீடுகள் குறித்த ஆய்வு

முந்தைய பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, சில இனங்களைத் தவிர, 2016–2017 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் பொதுவாக மொத்த மதிப்பீடுகளை ஒட்டியே இருக்கும் என கருதப்படுகிறது.

பொருளாதார மந்தநிலையால், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சியில் தாக்கம் தொடர்ந்து காணப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்கள் மீதான விற்பனை வரி மூலம் பெறப்படும் வரவினங்களின்

குறைவான வளர்ச்சியின் காரணமாகவும், பொருளாதார மந்த நிலை காரணமாகவும், வணிக வரிகளின் கீழ் பெறப்படும் நிதி ஆதாரங்கள் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. வணிக வரிகளின் குறைந்த வளர்ச்சி விகிதம் காரணமாக மொத்த வரி வருவாய் வரவுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதை ஈடுசெய்ய நிலுவை இனங்களை வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் ஆறு மாதங்களில் முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்களின் மூலமாகப் பெறப்பட்ட வருவாய் வரவுகள் சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது வருவாய் குறைந்து மாநிலத்தின் நிதி ஆதாரங்களை பாதித்துள்ளது. எனவே, முடக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மீதான முத்திரைக் கட்டண நிலுவையை வசூலிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் விளைவாக மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்கு குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததன் காரணமாக மாநில அரசின் நிதி ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும்,

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதிப் பகிர்வு குறைப்பின் காரணமாக, மாநில அரசிற்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. இச்செலவினத்தை மாநில அரசு தனது வருவாய் வரவுகளிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேலும் கூடுதல் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. மெட்ரிக்குலேசனுக்கு பிந்தைய வகுப்புகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை மீளப் பெறுவதில் முந்தைய ஆண்டுகளின் நிலுவை மற்றும் நடப்பு ஆண்டிற்கான வரவுகள், பதிமூன்றாவது நிதிக்குழு மானியங்களின் நிலுவைத் தொகை முதலானவற்றை மத்திய அரசு விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மாநிலத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய தொகையை முழுமையாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலம் கடுமையான நிதி நிலையில் உள்ளபோதிலும், பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகள் தடைபடாமல்

செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, மாநில வருவாய்க் கணக்கில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும், கடுமையான சிக்கன நடவடிக்கைகள், தவிர்க்கக்கூடிய செலவுகளைக் கட்டுப்படுத்தியும், வருவாய் வரவுகளை அதிகரிப்பதன் மூலமும் வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட அளவை ஒட்டியே நிதிநிலைப் போக்கு இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**2003**–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம் ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது. **2016–2017** ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, மாநிலத்தின்

நிதிநிலையை எடுத்துரைப்பதுடன், நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் வரவினம்–செலவினம் இடையேயான இடைவெளி குறைந்த அளவே இருக்கும் பொருட்டு மாநில அரசு திறன்மிகு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும் காட்டுகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்**
முதலமைச்சர்

*******

## பின்னிணைப்பு – I
## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| **2003–2004** கணக்கு | -20.28 | -1565.24 | -6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| **2004–2005** கணக்கு | -17.28 | -703.34 | -2.47 | 3.76 | 5569.76 | 2.75 |
| **2005–2006** கணக்கு | -14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.96 |
| **2006–2007** கணக்கு | -11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.43 |
| **2007–2008** கணக்கு | -8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.21 |
| **2008–2009** கணக்கு | < -5.00 | 1452.25 | 2.64 | <3.00 | 8547.76 | 2.52 |
| **2009–2010** கணக்கு | ** | -3531.22 | -6.32 | <4.00 | 11807.26 | 2.54 |
| **2010–2011** கணக்கு | < -5.00 | -2728.69 | -3.89 | <4.00 | 16646.62 | 3.21 |
| **2011–2012** கணக்கு | **0** / உபரிநிலை | 1364.10 | 1.60 | <3.00 | 17274.08 | 2.97 |
| **2012–2013** கணக்கு | **0** / உபரிநிலை | 1760.27 | 1.78 | <3.00 | 16518.99 | 2.39 |
| **2013–2014** கணக்கு | **0** / உபரிநிலை | -1788.24 | -1.66 | <3.00 | 20583.49 | 2.55 |
| **2014–2015** கணக்கு | **0** / உபரிநிலை | -6407.56 | -5.23 | <3.00 | 27162.44 | 2.49 |
| **2015–2016** துணை நிலைக் கணக்குகள் | <-5.00 | -11985.35 | -9.29 | <3.00 | 32627.56 | 2.69 |
| **2016–2017** திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | <-5.00 | -15854.46 | -10.70 | <3.00 | 40533.84 | 2.96 |

**இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை